இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 13-09-2024

# தர்மேந்திர பிரதானுக்கு..

மாண்புமிகு ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களே!

நீட் தேர்வில் அதிகப்படியான முறைகேடுகள் நடைபெற்றது உங்களது காலத்தில்தான் என்பதுதான் உங்களுக்கு உள்ள ‘பெருமை’ ஆகும்.

**★ 720 மதிப்பெண்ணுக்கு 720 மதிப்பெண்ணை 61 பேர் பெற்றதாக அறிவிக்கப்பட்டது முதலில். திருத்தப்பட்ட இறுதி முடிவுகளின்படி இந்த எண்ணிக்கை 17 ஆக குறைந்துவிட்டது. உச்சநீதிமன்றத்தில் வழக்குப் போடாமல் போயிருந்தால் 44 போலிகளுக்கு மருத்துவ இடம் கிடைத்திருக்கும்! இது உங்கள் சாதனை!**

**★ மே மாதம் 5 ஆம் தேதி நடைபெற்ற நீட் தேர்வு நடந்த நாளின் போதே உத்தரப்பிரதேச தேர்வு மையத்தில் தேர்வு தொடங்கும் முன் வினாத்தாள் சமூக வலைதளத்தில் கசிந்தது. அரியானாவிலும் பீகாரிலும், ஜார்கண்ட் மாநிலத்திலும் இதேபோல் வினாத்தாள் கசிந்தது. இதுவும் உங்கள் சாதனை!**

**★ அடுத்த மோசடியை கருணை மதிப்பெண் என்ற பெயரால் அரங்கேற்றியது தேசிய தேர்வு முகமை. 1500 பேருக்கு கருணை மதிப்பெண் வழங்கி இருக்கிறார்கள். இவர்களுக்கு மறுதேர்வு நடத்த உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. மறுதேர்வுக்குப் பலபேர் வரவில்லை. இதுவும் உங்கள் சாதனை.**

**★ இயற்பியல் வினாத்தாளில் குழப்பம் என்று சொல்லி 44 பேருக்கு கூடுதல் மதிப்பெண் போட்டிருந்தார்கள். அதுவும் உச்சநீதிமன்ற விசாரணையில் ரத்தாகிவிட்டது. இதுவும் உங்கள் சாதனை!**

**★ “நீட் தேர்வு வினாத்தாள்கள் ஹசாரிபாக், பாட்னாவில் கசிந்திருக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நீட் வினாத்தாள் கசிவால் 155 மாணவர்கள் பலனடைந்திருக்கிறார்கள் என்பது சி.பி.ஐ. விசாரணை மூலம் தெரிய வருகிறது” என்பதை உச்சநீதிமன்ற நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்கள். இதுவும் உங்கள் சாதனை தான்!**

**★ நீட் வினாத்தாள் கசிவு தொடர்பாக இதுவரை 24 பேர் கைதாகி சிறையில் இருக்கிறார்கள். இதுவும் உங்கள் சாதனை தான்!**

**★ நீட் வினாத்தாள் கசிவு தொடர்பாக இதுவரை 6 மாநிலங்களில் வழக்குப் பதியப்பட்டுள்ளது. இதுவும் உங்கள் சாதனைதான்!**

**★ நீட் முதுநிலைத் தேர்வை தேர்வு நாளன்று ரத்து செய்த புகழும் உங்களைத் தானே சேரும்! இந்தியா முழுவதும் 259 நகரங்களில் தேர்வு எழுத 2 லட்சம் மாணவர்கள் சென்று விட்டார்கள். இந்தச் சூழலில் அன்று காலையில் ரத்து என்று அறிவித்தீர்கள். 2 லட்சம் பேரை மன உளைச்சலுக்கு ஆளாக்கினீர்கள்.**

இப்படிப்பட்ட புகழுக்குச் சொந்தக்காரரான நீங்கள், கல்வியைப் பற்றிப் பேசுவது அதிர்ச்சிக்குரியதாக இருக்கிறது. “தனது அரசியல் ஆதாயங்களை விட மாணவர்களின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுத்து தமிழ்நாட்டில் தேசியக் கல்விக் கொள்கையை அமல்படுத்த வேண்டும்” என்று மாண்புமிகு முதலமைச்சருக்குச் சொல்லும் தகுதி உங்களுக்கு இருக்கிறதா?

மாணவர்களின் நலன்களைப் பற்றிக் கவலைப்படாமல் கோச்சிங் சென்டர்களின் மினிஸ்டராக நீங்கள் நடந்து கொண்டு வருவதைத்தான் இந்தியா பார்க்கிறதே? உச்சநீதிமன்ற நீதிபதிகள் கண்டித்தார்களே? நாடாளுமன்றத்தில், ‘எந்த தவறும் நடைபெறவில்லை’ என்று சாதித்தீர்கள். பின்னர், ‘தவறு நடந்திருந்தால் நடவடிக்கை எடுப்பேன்’ என்று பதுங்கினீர்கள். உச்சநீதிமன்றத்தில் மாற்றி மாற்றிச் சொன்னீர்கள். இதுதான் மாணவர்களைக் காக்கும் லட்சணமா?

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய நிதியை ஏன் தரவில்லை தர்மேந்திர பிரதான்? நீங்கள் சொல்லும் மாணவர் நலனுக்கு நீங்கள் சொல்லும் முன்னுரிமையைக் கொடுத்திருந்தால் நிதியை வழங்கி இருப்பீர்களே? நிதியைக் கொடுத்துவிட்டு, அரசியல் சண்டையை நீங்கள் போட்டிருக்கலாமே?

முதல் தவணையாக தரப்பட வேண்டிய நிதியானது மாணவர்களின் கல்விக்கு, பள்ளிகளின் மேம்பாட்டுக்குத் தானே பயன்படப் போகிறது? அதை எதற்காக அரசியல் காழ்ப்புடன் நிறுத்தி வைத்தீர்கள்? பி.எம்.ஸ்ரீ திட்டத்தை, இன்னொரு திட்டத்தின் நிபந்தனையாக ஆக்கியது அரசியல் உள்நோக்கம் அல்லவா? உங்களது கீழ்த்தர அரசியலுக்கு தமிழ்நாட்டு மாணவர்கள் மீது ஏன் படையெடுப்பு நடத்துகிறீர்கள்?

பலதரப்பினருடன் ஆலோசனை செய்த பிறகே தேசியக் கல்விக் கொள்கையை அமல்படுத்தியதாகச் சொல்லி இருக்கிறீர்கள். அப்போதே தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்கள் எதிர்ப்பு தெரிவித்ததே. அதற்கு உங்கள் பதில் என்ன? இந்தக் கொள்கையில் ‘இந்திய மக்களின் கூட்டு அறிவு நுட்பம் இருக்கிறது’ என்று சொல்கிறீர்கள். இதை விட அதிகமான அறிவு நுட்பம் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடும் கேரளாவும் எப்போதோ உயர்ந்துவிட்டது. ‘சிவாஜி செத்துட்டாரா?’ என்று கேட்பதுபோல இப்போதுதான் நீங்கள் புறப்படத் தொடங்கி இருக்கிறீர்கள்.

**பி.எம்.ஸ்ரீ திட்டம் என்பது இந்தியைத் திணிக்கும் திட்டமே தவிர வேறல்ல. கல்வியில் முன்னேறிய மாநிலங்களை மீண்டும் பின் நோக்கி அழைத்துச் செல்லும் திட்டம் இது. இதன் மூலமாக வடமாநிலங்களைப் போல, தமிழ்நாட்டையும் தரையிறக்கப் பார்க்கிறீர்கள்.**

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டம் என்பது 2009 ஆம் ஆண்டு முதல் அமலில் இருப்பது. அதன் மூலமாக 15 ஆண்டுகளாக ஒன்றிய அரசில் இருந்து நிதி வருகிறது. அதை, 2020 ஆம் ஆண்டு தொடங்கிய கல்விக் கொள்கைக்கு நிபந்தனையாக்கியது சதிச் செயல் அல்லவா? நீங்கள் மாணவர் நலனைப் பற்றி எல்லாம் பேசலாமா?**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 10.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், ஐடிசர்வ் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் ஜெகதீஸ் மொசாலி, இயக்குநர்கள் சிவ மூப்பனார், சம்ப மொவ்வா, சிகாகோ பிரிவு தலைவர் சதீஷ் யலமஞ்சிலி மற்றும் உயர் அலுவலர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் திறன்மிகுந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திட தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில்

## மைலம் தொகுதியில் ‘கலைஞர் நூலகம்’!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் - அப்துல் மாலிக் திறந்து வைத்தனர்!

*மைலம், செப். 13-*

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் மைலம் சட்டமன்றத் தொகுதியில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கலைஞர் நூலகம் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

கூட்டேரிப்பட்டு மயிலம் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் தலைமை தாங்கினார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் அனைவரையும் வரவேற்றார். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.கே.பி.ரமேஷ், உதயகுமார், எம்.டி.பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர்கள் விஜயகுமார், அண்ணாமலை ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், மாநில திமுக இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக் ஆகியோர்கலந்து கொண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருஉருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி கலைஞர் நூலகத்தை திறந்து வைத்தனர்.

தொடர்ந்து நூலகத்தில் உள்ள பல்வேறு புத்தகங்களை பார்வையிட்ட அமைச்சர் செஞ்சி மஸ்தான், மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக் ஆகியோர் நூலகத்தில் புத்தகத்தை வாசித்தனர்.

இதில்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், செந்தமிழ்ச்செல்வன், மாநில தீர்மானகுழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட துணை செயலாளர் அமுதா ரவிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் மணிமாறன், துரை, இளம்வழுதி, பொதுக்குழு உறுப்பினர் வீடூர்ரவி, மயிலம் ஒன்றிய துணை சேர்மன் புனித ராமஜெயம், மாவட்ட கவுன்சிலர்கள் விஜயன், மகேஸ்வரி குமரேசன், அன்பு செழியன், இளைஞரணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மயிலம் தெற்கு ராமமூர்த்தி, பொண்ணு வேல், சங்கர், கார்த்திகேயன், ஆனந்தராஜ், மயிலம் வடக்கு இளங்கோவன், ராஜா, சக்திவேல், பிரதாப்,

வல்லம் தெற்கு செந்தமிழ் செல்வன், மோகன், மணிகண்டன், சசிகுமார், கண்ணப்பன், முருகதாஸ், ராஜ்குமார், வல்லம் வடக்கு விஜய் விக்னேஷ், மேகவர்ணன், காண்டீபன், சங்கர், ஜெயபிரகாஷ், ஸ்ரீதர், பாக்யராஜ், சிவராமன், ரஞ்சித் குமார், ஹேமசாதன், மற்றும் சிறுபான்மையினர் நல அணி அமைப்பாளர் அன்சாரி, கலை இலக்கிய பகுத்தறிவு அணி அமைப்பாளர் செந்தில் குமார், விவசாய அணி மாவட்ட தலைவர் நெடி சுப்பிரமணியன் உள்ளிட்ட தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.

### கழக பவள விழா - முப்பெரும் விழா! தலைவரின் அறிவிப்பிற்கிணங்க

## கரூர் மாவட்டத்தில் இல்லந்தோறும் கழகக் கொடியேற்றிடுவீர்!

### மாவட்டக் கழகம் வேண்டுகோள்!

*கரூர், செப்.13 -*

தி.மு.கழகத்தின் பவள விழா - செப்டம்பர்-15 பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் நாளில் கழகத் தலைவர் தளபதி அவர்களின் அன்பு ஆணைக்கிணங்க கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கழகத் தோழர்கள் வீடுகளிலும் கழக கொடியை ஏற்றி பட்டொளி வீசிப் பறக்கச் செய்திடுவோம் என கரூர் மாவட்ட கழகம் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கரூர் மாவட்ட கழகம் சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கை:-

காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட “திராவிட முன்னேற்றக் கழகம்” என்ற பேரியக்கம், அண்ணாவின் கொள்கைத் தம்பிகளால் வளர்க்கப்பட்டு அவரது தம்பிகளால் தலையாய தம்பியான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 50 ஆண்டுகளுக்கு மேல் கட்டிக் காக்கப்பட்டு,

நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் நமது உயிரினும் மேலான அன்புத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் வெற்றிகரமாக இயங்கிக்கொண்டிருக்கிற வேளையில் தி.மு.கழகம் பவள விழா நிறைவு பெறுகிறது. நம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கின்ற கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்கள் அன்பு ஆணையிட்டுள்ளார்.

இந்தியாவுக்கே முன்னோடியான பல திட்டங்களை வகுத்து, சட்டங்களை உருவாக்கி, இன்று இந்தியாவை வழிநடத்தக்கூடிய வகையில், தி.மு.கழகம் தனக்கென தனித்துவமான இடத்தைப் பெற்று திகழ்கிறது என்றால், அந்த பெருமை எல்லாம் நம் உயிராகவும் - உதிரமாகவும் திகழ்கின்ற தி.மு.கழகத்திற்கே உரியது.

இந்திய அளவில் தவிர்க்க முடியாத இயக்கமாக திகழ்கிறது தி.மு.க. எனும் பேரியக்கம், இந்த வரலாற்றுப் பெருமையில் கழக உடன்பிறப்புகள் ஒவ்வொருவரின் பங்கு அளப்பரியது.

75 ஆண்டுகளைக் கடந்து பவள விழாவை நிறைவு செய்த பேரியக்கம் வெற்றி - தோல்விகளை கடந்து, தனது இலட்சியப் பாதையில் உறுதி குலையாமல் பயணித்து வரும் தி.மு.கவுக்கு எத்தனை நெருக்கடிகள் வந்தாலும் அதனை எதிர்கொண்டு, முதுகு வளையாமல், தரையில் தவழாமல், நெஞ்சை நிமிர்த்தி நின்று, “நான் தி.மு.க.காரன், நான் கலைஞரின் உடன்பிறப்பு, தளபதியின் அன்புத் தொண்டன்” என்று கம்பீரமாகச் சொல்கின்ற துணிவும் வலிவுமே கழகத் தொண்டர்களின் அடையாளம்.

அந்த கம்பீரத்துடன், பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகம், தனது 75வது ஆண்டினை பவள விழாவாகக் கொண்டாடி மகிழ்ந்து வருகிறது.

கழகத்தின் பவள விழா ஆண்டு கழகத்தை தோற்றுவித்த பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் - 15 அன்று காலை கழகத்தின் அனைத்து கிளைகளிலும் கழக கொடிக்கம்பங்களை புதுப்பித்து கழகத்தின் இலட்சிய இருவண்ணக் கொடியை கம்பீரமாக ஏற்ற வேண்டும் என்றும், இந்த கழகத் தொண்டர்களால் தான் இந்த பேரியக்கம் 75 ஆண்டுகளை கடந்து கம்பீரமாக பீடுநடை போட்டு வருகிறது என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டும் வகையில்,

கழகத் தோழர்களின் அனைவரின் வீடுகளிலும் கழக கொடியை பட்டொளி வீசச் செய்திட வேண்டும் என்று நமது நெஞ்சம் எல்லாம் நிறைந்திருக்கும் என நமது தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்களின் அன்பு கட்டளைக்கிணங்க,

கரூர் மாவட்டம், மாநகரம் பகுதி ஒன்றியம் - நகர - பகுதி - பேரூர்களில் அடங்கி உள்ள வார்டு - கிளைகளில் உள்ள அனைத்துக் கொடிக் கம்பங்களையும் வர்ணம் தீட்டி புதுப்பித்து வருகிற செப்டம்பர்-15 அண்ணா பிறந்த நாள் அன்று காலை 9.00 மணிக்கு அனைத்து கிளைகளிலும் கழக முன்னோடி களை வைத்து, கழகக் கொடியை ஏற்றிடுவோம். ஒட்டு மொத்த கழக நிர்வாகிகள் செப்டம்பர் 15-ஆம் தேதி காலையிலேயே கழக கொடி ஏற்றி, கழக கொடி பட்டொளி வீசுவது பார்ப்பதற்கு கண்கொள்ளா காட்சியாக இருந்திட வேண்டும்.

“கட்டுக்கோப்பான தொண்டர்கள் நிறைந்த இயக்கம் தி.மு.க.” நாட்டு மக்களுக்கு பறைசாற்றிடும் வகையில், கரூர் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி, எம்எல்ஏ, ஆலோசனைப்படி கழகத்தினர் அனைவரின் இல்லங்களிலும் கழக கொடியை கம்பீரமாக ஏற்றி, தி.மு.கழக பவள விழாவை கழகத்தினர் குடும்ப விழாவாக கொண்டாடி மகிழ்ந்திட வேண்டும் என்று கழகத்தினர் அனைவரையும் கேட்டுக்கொள்வதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பெரம்பலூர் மாவட்ட

## மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி கலந்தாய்வுக் கூட்டம்!

### மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!



*பெரம்பலூர், செப்.13-*

பெரம்பலூர் மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. மகளிர் அணி, மகளிர் தொண்டரணி கலந்தாய்வுக் கூட்டம் இன்று (13.09.2024, வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணி அளவில், பெரம்பலூர் மாவட்ட கழக அலுவலகத்தில், எனது (மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன்) தலைமையில் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் மாநில மகளிர் பிரச்சார குழு செயலாளர் சேலம் சுஜாதா, வலை தள பொறுப்பாளர் ரேகாபிரியதர்ஷிணி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இதில் மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், சமூக வலைதள பொறுப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டுகிறேன். மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் வரவேற்புரையாற்றுகிறார். மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் புஷ்பவள்ளி ராஜேந்திரன் நன்றியுரையாற்றுகிறார். எனவே மாநில, மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய,நகர, பேரூர் கழக தி.மு.க. செயலாளர்கள் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1.மகளிர் அணி உறுப்பினர் சேர்த்தல்,

2.கழக முப்பெரும் விழா.

3.இளம் பெண்கள் பயிற்சி பாசறை நடத்துவது குறித்து.

4.கழக வளர்ச்சிப் பணிகள்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் மைலம் சட்டமன்றத் தொகுதி கூட்டேரிப்பட்டு மயிலம் சாலையில் அமைக்கப்பட்டகலைஞர் நூலகத்தை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக் ஆகியோர் பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர். உடன் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ்ச்செல்வன், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.